## (ஐ) விலைகளும் கூலிகளும்

### 1. விலைகள்:

அண்மைக்காலங்களில் இலங்கையின் விலைமட்ட மாற்றங்களை அளவிடும் கருவியாக விளங்குவதில், கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியே இலங்கையின் விலைமாற்றங்களுக்கான முக்கிய குறிகாட்டியாயுள்ளது. எனினும், உண்மைநிலையை எடுத்துக் காட்டுவதில் அது பயனுடையதாக அமையவில்லை என்பதனைக்கடந்த ஆண்டறிக்கைகள் * தெளிவாகக் காட்டியுள்ளன.

கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியினால் காட்டப்பட்டவாறு, நுகர்வோர் விலைகளின் ஆண்டுச்சராசரியானது 1972இன் 6.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1973இல் 9.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 1973இல் குறிகாட்டி சனவரி, யூன், ஆகத்து, ஒற்ரோபர் மாதங்களில் முறையே 2.3, 2.9, 1.8, 2.7 சதவீதங்களால் அதிகரிக்க 1973இன் ஏனைய மாதங்களில் இக்குறிகாட்டி மாதந்தோறும் சராசரியாக 0.5 சதவீதத்தால் உயர்ந்துள்ளது.

அரிசி, கோதுமை மா, எரிபொருள், ஆடைகள், பால் உணவுகள், சுவையூட்டுப் பொருட்கள், தேங்காய், முட்டையாகிய முக்கியமான நுகர்வுப் பொருட்களின் விலை அதிகரிப்பு 1973இன் கூரிய விலை அதிகரிப்புக்கு/முக்கிய காரணமாகும். உலகச் சந்தைகளில் அதிக இன்றியமையாத பொருட்களுக்கு அருமை ஏற்பட்டதன் காரணமாக இவற்றின் இறக்குமதி விலைகள் பெரிதும் உயர்ந்தன. உலகமுற்றிலும் காணப்பட்ட பணவீக்கப்போக்குகளும் கப்பற் கட்டண அதிகரிப்புகளும் தொடர்ந்து 1973இன் விலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தின. உலகமுற்றிலும் இயக்க ஆற்றலுக்கு ஏற்பட்ட நெருக்கடி உள்நாட்டில் விலைகளின் துரிதமான ஏற்றத்துக்குக் காரணமாயிற்று அதிகமான பொருட்களின் விலைகளில் இக்காரணிகள் பாதகமான விளைவை ஏற்படுத்தின 1973இல் நிலவிய பாதகமான காலநிலைகளும் உள்நாட்டு உற்பத்தியில் வீழ்ச்சியை விளைவித்து, பொருட்களில் அருமையை ஏற்படுத்தி அதன் விலைகளையும் உயர்த்தின.

---

* கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியின் முக்கிய குறைபாடுகளாவன :

(அ) கொழும்பு நகரில் வசிக்கும் சராசரித் தொழிலாளர் வகுப்புக் குடும்பத்தின் வாழ்க்கைச் செலவின மாற்றங்களையே அளவிட இவ்விலைக்குறிகாட்டி அமைக்கப்பட்டதனால் பொதுமட்டத்திலுள்ள விலைகளின் மாற்றங்களை அளவிடுவதற்கு இது போதியதாக அமையவில்லை.

(ஆ) தொழிலாளர் வகுப்பின் நுகர்வுத் தன்மையில் கணிசமானளவு மாற்றங்கள் ஏற்பட்டபோதும் 1952ற்குப்பின் நிறைப்படுத்தல்கள் திருத்தியமைக்கப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட விடயங்களின் கிடையாத்தன்மை அல்லது நுகர்வு நடத்தையில் ஏற்பட்ட எதிர்பாராத மாற்றங்களின் விளைவாக நுகர்வு அளவில் ஏற்பட்ட குறைப்பு என்பவற்றின் பொருட்டு குறிகாட்டியில் விலை நிறைப்படுத்தல்கள் காலாகாலங்களில் சீராக்கம் செய்யப்பட்டன. எனினும் இத்தகைய சீராக்கங்கள் குறிகாட்டிக்கு ஒரு தன்விருப்பத்தன்மையை அளிக்கின்றது.

(இ) பற்றுக்குறைகள் காரணமாகப் பண்டங்களின் நிரம்பல் தளம்பியதன் காரணமாக வெளிச்சந்தையிலும் கட்டுப்படுத்தப்பட்ட சந்தைகளிலும் நிலவும் தொடர்பான விலைகளுக்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

1973 நவம்பர் 1ஆம் திகதியிலிருந்து மொத்த விற்பனவு வரிக்குள் மேவப்படும் விடயங்கள் கூட்டப்பட்டு இதற்குள் இதுவரைகாலமும் அடக்கப்படா திருந்த சில விடயங்கள் இவ்வரி நோக்கினுள் அடக்கப்பட்டன. 1972இன் இறுதிப்பாகத்தில் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டுச்செலாவணி உரிமைச் சான்றிதழ் விலையை அதிகரித்ததினதும், மொத்த விற்பனவு வரிநோக்கினை விரிவுபடுத்தியதினதும் தாக்கம் 1973 இற்முன் முற்முக ஏற்பட்டது. 1973இன் யூன், யூலை, ஒகத்து மாதங்களில் முக்கியமாக ஏற்பட்ட பணநிரம்பலின் கூரிய அதிகரிப்புகளும் இந்நிலைக்குக் காரணமாயின.

1973இல் அரிசி, கோதுமை மா, சீனி, மாசிக்கருவாடு, பருப்பு என்பன வற்றின் பங்கீட்டுத்திட்டத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காணப்பட்டன. முதல் தடவையாக 1973 ஒற்ருேபர் 1ஆம் திகதியிலிருந்து கோதுமை மா பங்கீட்டு முறையில் வழங்கப்பட்டது. அதிகமான இன்றியமையாத பொருட்களின்மீது நிலவும் விலைக்கட்டுப்பாடு, உயர்ந்த இறக்குமதிச்செலவு அல்லது உற்பத்திச்செலவுகளின் உயர்வைக் கவனத்திற்கொண்டு மேலும் கூடிய விலை ஏற்றத்தைக் கொண்டதாகத் திருத்தியமைக்கப்பட்டது பாலுணவுப்பொருட்கள், மண்வெட்டிகள் (லங்கா லோகா) சிலவகைக் கரிசத்திராவகங்கள், கல்நார் (அசுபெசுட்டோஸ்) தட்டுகள். குடைகள், சீமெந்து என்பன இவ்வகையிலடங்கும் முக்கிய விடயங்களாகும். ஆயினும் 1973இல் பட்டுவகைகள், சவர்க்காரம் போன்ற சில பொருட்களின் விலைக்கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டு அதேவேளையில் 'கவ் அன் கேட்' பாலுணவு, சிலவகைக் கரிசத் திராவகங்கள், செயற்கைப் பட்டுக்களில் செய்யப்பட்ட சேட்டுக்கள் போன்ற விடயங்கள் விலைக்கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரப்பட்டன.

**(அ) கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி:**

முன்னர் குறிப்பிட்டவாறு கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி 1972இன் 6.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1973இல் 9.7 சதவீதத்தால் அதிகரித்தது. துணைக்குறிகாட்டிகளான உடை 14.0 சதவீதத்தாலும், எரிபொருளும் வெளிச்சமும் 12.7 சதவீதத்தாலும், உணவு 11.7 சதவீதத்தாலும் பல்வகை விடயங்கள் 0.3 சதவீதத்தாலும் அதிகரித்தன. 1972இன் தொடர்பான அதிகரிப்புகள் முறையே 12.8, 3.6, 6 0, 6.2 சதவீதங்களாக விருந்தன.

பொதுவான குறிகாட்டியில் அதிக முக்கியத்துவத்தை (61.9 சதவீதம்) கொண்டுள்ள உணவுப்பொருட்களான துணைக்குறிகாட்டி, சனவரி, யூன், ஒகத்து, ஒற்ருேபர் மாதங்களில் முறையே 2.7, 4.7, 1.3, 4.0 ஆகக்கூர்மையாக அதிகரித்தது. 1973இன் ஏனைய மாதங்களில் குறிகாட்டியின் உணவுக்கான மாதச் சராசரி அதிகரிப்பு 0.8 சதவீதமாக இருந்தது. இக்கணிசமான அதிகரிப்புக்குக் கோதுமை மா. சீனி, பட்டர், வாசனைப்பொருட்கள், பயறுவகை, ஏனைய சுவையூட்டுப் பொருட்கள் ஆகிய இறக்குமதி செய்யப்பட்ட உணவு விடயங்களின் விலை அதிகரிப்புகளே காரணமாகும். 1973இன் இலவச அரிசிப்பங்கீடு ஒரு கொத்திலிருந்து அரைக்கொத்தாகக் குறைக்கப்பட்டதுடன் பங்கீட்டின் இரண்டாவது கொத்து அரிசி விலையும் ரூ. 1இலிருந்து ரூ. 1.60

## அட்டவணை II (ஐ) 1

## கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டி
## (அடியாண்டு 1952=100)

| ஆண்டு | எல்லா விடயங்களும் | பண்ட வகைப்படி | | | | | துறை வகைப்படி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உணவு | உடை | எரிபொருளும வெளிச்சமும | வாடகை | பல்வகைப் பட்ட பொருட்கள் | உள் நாட்டுத் தொகுதி | இறக்கு மதித் தொகுதி | ஏற்று மதித் தொகுதி |
| முக்கியத்துவம் | 100.0 | 61.9 | 9.4 | 4.3 | 5.7 | 18.7 | 60.0 | 35.0 | 5.0 |
| 1969 சராசரி | 130.5 | 127.9 | 130.9 | 124.9 | 108.4 | 147.1 | 134.2 | 123.6 | 148.2 |
| 1970 சராசரி | 138.2 | 136.6 | 137.3 | 136.1 | 109.8 | 153.2 | 142.9 | 129.3 | 157.3 |
| 1971 சராசரி | 141.9 | 139.1 | 145.0 | 140.8 | 109.8 | 159.5 | 148.9 | 129.7 | 157.9 |
| 1972 சராசரி | 150.8 | 147.5 | 163.4 | 145.9 | 109.8 | 169.5 | 161.6 | 136.1 | 140.6 |
| 1ஆம் கால் | 148.1 | 144.8 | 154.2 | 142.8 | 109.8 | 168.9 | 157.7 | 133.9 | 147.2 |
| 2ஆம் கால் | 150.3 | 147.0 | 160.1 | 146.4 | 109.8 | 169.3 | 160.8 | 135.3 | 143.6 |
| 3ஆம் கால் | 152.2 | 148.8 | 168.2 | 146.4 | 109.8 | 169.5 | 164.0 | 137.2 | 128.8 |
| 4ஆம் கால் | 153.0 | 149.4 | 171.4 | 148.0 | 109.8 | 170.2 | 164.0 | 137.8 | 143.0 |
| 1973 சராசரி | 165.4 | 164.8 | 186.1 | 164.4 | 109.8 | 170.0 | 167.8 | 162.5 | 171.9 |
| 1ஆம் கால் | 157.7 | 155.5 | 181.6 | 155.4 | 109.8 | 168.7 | 164.6 | 148.3 | 159.0 |
| 2ஆம் கால் | 161.4 | 160.7 | 181.6 | 155.4 | 109.8 | 170.4 | 165.8 | 154.6 | 170.4 |
| 3ஆம் கால் | 167.8 | 169.3 | 188.7 | 167.5 | 109.8 | 170.4 | 169.8 | 166.1 | 171.6 |
| 4ஆம கால் | 174.8 | 179.3 | 192.3 | 179.2 | 109.8 | 169.8 | 171.2 | 181.2 | 186.6 |
| 1971 விட 1972இல் சதவீத அதிகரிப்பு | 6.3 | 6.0 | 12.8 | 3.6 | 0.0 | 6.2 | 8.5 | 4.9 | – 11.0 |
| 1972ஐ விட 1973 இல் சதவீத மாற்றம் | 9.7 | 11.7 | 14.0 | 12.7 | 0.0 | 0.3 | 3.8 | 19.4 | 22.3 |

மூலம்: குடித்தொகை மதிப்புப் புள்ளிவிவரத் திணைக்களமும், இலங்கை மத்திய வங்கியும்.

சதமாக உயர்ந்து இறுதியில் ரூ. 1.40 சதமாகக் குறைக்கப்பட்டது. கோதுமை மாவும் முதல் தடவையாக, 1973இல் பங்கீட்டு முறையின்கீழ்க் கொண்டு வரப்பட்டதுடன் அதன் விலையும் இருத்தலொன்றுக்கு 33 சதத்திலிருந்து மூன்று தடவை கூட்டப்பட்டு 70 சதமாக அதிகரிக்கப்பட்டது. இத்தகைய மாற்றங்களுக்கு ஏற்ப பாணின் விலை 34 சதத்திலிருந்து 76 சதமாக உயர்ந்தது அத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவே கிடைக்கத்தக்கதாயிருந்தது. விலை அதிகரிப்பின்பாற்பட்ட மற்றைய முக்கிய பண்டம் சீனியாகும். பங்கீட்டு முறையின்கீழ் ஓராளுக்கு வழங்கப்பட்ட சீனியின் விலை இருத்தலொன்றுக்கு முன்பு இருந்ததுபோல் 72 சதமாகவே விளங்க, அதன் அளவு 2 இருத்தலிலிருந்து ¾ இருத்தலாகக் குறைக்கப்பட்டது. முன்னர் இருத்தலொன்றுக்கு ஒன்றரை ரூபாவாக விளங்கிய பங்கீட்டுத்திட்டத்திலடங்காத சீனி இருத்தலொன்றிற்கு ரூ. 2 ஆக உயர்த்தப்பட்டது. உள்நாட்டு உற்பத்தியில் ஏற்

பட்ட வீழ்ச்சியின் விளைவாகத் தேங்காய், தேங்காய் எண்ணெய் என்பவற்றில் ஏற்பட்ட விலைகளும் மிகக் கூர்மையாக உயர்வடைந்தன. 1973 மே 26 இலிருந்து பால், கட்டிப்பால் என்பனவற்றின் விலைகள் உயர்த்தப்பட்டன. கோழித்தீனின் அதிகரித்த விலை காரணமாக முட்டைகளின் விலையும் உயர்ந்தது. தேயிலை, கோப்பி,எ லுமிச்சை,பழப்பாகு, விசுக்கோத்து ஆகிய உணவு விடயங்களும் குறிப்பிட்ட விலை அதிகரிப்பினைப் பதிவுசெய்துள்ளன. துணைத் தொகுதிக் குறிகாட்டிகளில் உடைத்தொகுதிக்கான குறிகாட்டி 1972இல் நிலவிய போக்கினைத் தொடர்ந்து 1973இலும் பெருமளவு சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்துள்ளது. 1973இன் குறிகாட்டி 1972 இன் 12.8 சத அதிகரிப்புக்கு மாறாக 14.0 சதவீதமாக அமைந்தது.

எரிபொருள் வெளிச்சத்திற்கான துணைக்குறிகாட்டி 1972இன் 3.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1973இல் 12.7 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளது. இத்தகைய அதிகரிப்புக்கு 1972 திசெம்பர் 31இலும், 1973 ஓகத்து 24இலும் மண்ணெண்ணெயின் விலைகளில் ஏற்பட்ட விலை ஏற்றம் பெரிதும் காரணமாகும். அத்துடன் 1973 ஆகத்தில் விறகின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பும் இதற்கு உடந்தையாகவிருந்தது.

1973இல் வாடகைக்கான துணைக்குறிகாட்டியில் ஒருவித மாற்றமும் ஏற்படவில்லை.

6.2 சதவீதம்கொண்ட 1972இன் தொடர்பான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1973இல் பல்வேறு விடயங்களுக்கான துணைக்குறிகாட்டி 0.3 சதவீதமாக அமைந்தது. புகையிலையின் உண்ணுட்டுத் தீர்வையில் ஏற்பட்டகீழ்நோக்கிய விலைமாற்றம் துணைக்குறிகாட்டியின் ஆண்டுச்சராசரி அதிகரிப்பினை ஓரளவு எதிரீடு செய்ய உதவியது. தேங்காய் எண்ணெயில் ஏற்பட்ட விலை உயர்வுக்கு வகைசெய்யும்முறையில் சவர்க்காரத்தின் கட்டுப்பாட்டு விலை 1973 மாச்சில் 20 சதவீதத்தால் உயர்த்தப்பட்டது. மீண்டும் அதே காரணத்தால் 1973 ஒற்ருேபர் 1ஆம் திகதியிலிருந்து சவர்க்காரத்தின் கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டது. இதனுல் ஒற்ருேபரிலும் நவெம்பரிலும் முறையே 9 சதவீத விலை அதிகரிப்புகள் ஏற்பட்டன.

**(ஆ) கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியுள் உள்ளடக்கப்படாத விலைகள் :**

கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியினுள் அடங்கும் விடயங்களின் விலைகளுடன் வேறு ஏனைய குறிப்பிட்ட சில விடயங்களின் விலைகளையும் இலங்கை மத்திய வங்கி ஒழுங்காகச் சேர்த்துள்ளது. இவை கொழும்பு நகரில் சில்லறை வியாபாரிகளுடன் நடத்திய நேரடி விசாரணைகள் வாயிலாகப் பெறப்பட்டன. வெளியிடப்பட்ட வர்த்தக விலைப்பட்டியல்களும் இந்நோக்கத்திற்காக ஆராயப்படுகின்றன.

விரிவான பகுப்பாய்வுக்காக இவ்விடயங்கள் நுகர்வோர், இடைநிலை, முதலீட்டப் பொருட்கள் என்று பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

1972ஆம் ஆண்டிறுதியிலிருந்து 1973ஆம் ஆண்டிறுதி வரையுள்ள காலப்பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்களின் விலைகளிலேற்பட்ட சதவீத மாற்றத்தினை அட்டவணை 11 (ஐ) 2 காட்டுகின்றது. இவ்வெண்தொகைகள் ஒவ்வொரு வகைப் பொருட்களின் விலை அசைவுகளை ஓரளவுக்கு எடுத்துக்காட்டுவனவாகக் கருதப்படலாம்.

## அட்டவணை II (ஐ) 2

### கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டியினுள்* அடங்காத விலைகள்

| பொருளின் வகை | சதவீத அதிகரிப்பு 1973/72 |
|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | |
| புழுங்கல் அரிசி ... ... ... | + 50—55 |
| தகரத்திலடைத்த மீன் ... ... ... | + 30 |
| பழஹைறல், ஜெலி, சுவைக்கூட்டு, பழரசம் ... ... | + 7—51 |
| பற்பசைகள் ... ... ... | + 23 |
| ரல்கம் பவுடர் ... ... ... | + 44—76 |
| ஓடிக்குளோன் ... ... | + 15—40 |
| சேட்டுக்கள் ... ... ... | + 21—50 |
| மெழுகுதிரிகள் ... ... ... | + 22 |
| பலதரப்பட்ட தோல் உற்பத்திகள் ... ... | + 5 |
| கைமின் விளக்கினதும் மின்மப் பெருக்கியினதும் மின்கலங்கள் (ரோச்சினதும், ரான்ஸிஸ்ரரினதும் பற்றறிகள்) ... ... | + 9—20 |
| மின் விசிறிகள் ... ... ... | + 16 |
| தையல் எந்திரங்கள் ... ... | + 13—27 |
| மின் குமிழ்கள் (பல்ப்புகள்) ... ... ... | + 15 |
| மின்சார இணைப்புக்கள் (முக்கியமாக மின்கம்பு வடங்கள்) ... | + 26—49 |
| மோட்டார் வண்டி துணை உறுப்புக்கள் ... ... | + 2—62 |
| மோட்டார் வண்டி மின்கலங்கள் ... ... | + 47—52 |
| **நடுத்தரப் பொருட்கள்** | |
| தாள் ... ... ... | + 21—25 |
| பெற்றோல் ... ... ... | + 14—15 |
| செப்புக் கம்பி ... ... ... | + 40—67 |
| சோடாத் தூள் ... ... ... | + 22 |
| எரி சோடா ... ... ... | + 4 |
| **முதலீட்டப் பொருட்கள்** | |
| கட்டடப் பொருட்கள் ... ... ... | + 29 |
| தாங்குகருவி உள்ள கழுவும் தொட்டி (வேசின்) (22"×16") (உள்ளூர்) | |
| தாங்கு கருவியற்ற கழுவும் தொட்டி (22"×16") (உள்ளூர்) ... | + 1 |
| மலசல கூடத் தொட்டி—உள்ளூர் ... ... | + 22 |
| மண் குழாய்கள் 2''x4'' ... ... ... | + 15 |
| மண்வெட்டி ... ... ... | + 45 |
| இலங்கைக் கோடரிகள் ... ... ... | + 16 |
| கரியம் குறைந்த உருக்கு ... ... .. | + 12—28 |
| இணைப்புக்கள் ... ... ... | + 8—21 |
| மோட்டிஸ் கதவுப் பூட்டுகள் ... ... ... | + 14 |
| ஒட்டோ கம்பிகள் ... ... ... | + 30—50 |
| தட்டை இணை ... ... .. | + 20—54 |
| றப்பர் எந்திரங்கள் ... ... ... | + 5 |

* பொருட்களின் வகைகளுக்கு எதிராகத் தரப்பட்டுள்ள சதவீத அதிகரிப்புக்கள் அவற்றுற்குரிய பொருட்களின் ஆகக் குறைந்த ஆகக் கூடிய சதவீத அதிகரிப்பினைச் சுட்டிக்காட்டும்.

நுகர்வோர் பொருட்கள் :

1973இல் கொழும்பில் புழுங்கல் அரிசியின் வருடாந்த சராசரிவிலை அதிகரிப்புச் சந்தையில் 50 சதவீதத்திலிருந்து 55 சதவீதம்வரை தளம்பலுற்றிருந்தது. 1972இன் தொடர்பான காலப்பிரிவுடன் ஒப்பிடுகையின் 1973இன் முதல் மூன்று காலாண்டுகளுக்கான அரிசியின் சராசரி விலையானது 18 சதவீதமாக அதிகரித்துள்ளது. 1973இன் இறுதிக்காலாண்டில் அரிசியின் சராசரி விலையைக் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 155 சதவீதத்தால் அதிகரித்தது. பங்கீட்டு அரிசியின் அளவு குறைக்கப்பட்டமையும், கோதுமை மாவின் பங்கீட்டு முறையும் காரணமாகச் சந்தையில் ஏற்பட்ட அதிகரித்த கேள்வியே இவ்விலை அதிகரிப்பிற்குக் காரணமாகும்.

இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் அதிகரித்த விலையும், கப்பற் கட்டணங்களில் ஏற்பட்ட விலை அதிகரிப்பும் கூலிகள் உயர்ந்தமையும் காரணமாக ஏனைய நூர்வுப்பொருட்களின் விலைகள் அதிகரித்தன. வெளிநாட்டுச் செலாவணி உரிமைச்சான்றிதழ்களின் உயர்ந்த விலைகளும், 1972இன் இறுதிப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட மொத்த விற்பனவு வரியின் அதிகரிப்புகளும் தமது முற்றான பாதிப்பை 1973இலேயே ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

இடைநிலைப் பொருட்கள்:

வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்களின் விலை உயர்வினால் தாளின் விலை அதிகரித்தது. மேலும் 1973இல் உலகம் பூராவும் தாளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு விலைகள் கூர்மையாக அதிகரித்தன. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இடைநிலைப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு உயர்ந்த உற்பத்திச் செலவுகளே முக்கிய காரணமாகும். 1973, ஓகத்து 24இலிருந்து அதி உயர்ந்த ரகப் பெற்றோலின் விலை கலனொன்றிற்கு ரூ. 5.75இலிருந்து ரூ. 6.50 ஆக உயரச் சாதாரண பெற்றோல் கலனொன்றின் விலை ரூ. 5.30 இலிருந்து ரூ. 6.10 ஆக அதிகரித்தது. இத்தகைய விலை ஏற்றத்துக்கு இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெயின் உயர்ந்த செலவும் கப்பற்கட்டண அதிகரிப்பும் முக்கிய காரணமாயமைந்தன.

முதலீட்டப் பொருட்கள் :

1973ஆம் ஆண்டுப்பகுதியில் அரசாங்க உருக்குக் கூட்டுத்தாபனத்தின் முடிவுப் பொருட்களின் விலைகளில் கணிசமான அதிகரிப்புக் காணப்பட்டது. உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கமளிக்குமுகமாக இறக்குமதி செய்யப்பட்ட மண் வெட்டிகளின் விலைக்கட்டுப்பாடு 1973இல் நீக்கப்பட்டது. மூலப்பொருட்களின் அதிகரித்த விலையினாலும் உற்பத்தியின் அதிகரித்த செலவினாலும் பெரும்பாலான முதலீட்டப்பொருட்களின் விலைகள் அதிகரித்தன.

## தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூரில் தயாரிக்கப்பட்ட

| | கூறு | தொழிற் சாலை விலை ரூ. 1972 | தொழிற் சாலை விலை ரூ. 1973 | சதவீத மாற்றம் 1973/72 |
|---|---|---|---|---|
| **1. உணவு, பானங்கள், புகையிலை** | | | | |
| விசுக்கோத்து (கிறீம் கிறேக்கர்ஸ்) ... ... | ஒரு தகரம் | 6.32 | 7.67 | + 21 |
| பால் மா (லக்ஸ்பிறே) . ... ... | ஒரு ருத். தகரம் | 2.98 | 3.99 | + 34 |
| கட்டிப் பால் .. ... ... ... | 14 அவு. தகரம் | 1.15 | 1.65 | + 43 |
| பட்டர் ... ... ... ... | ஒரு ருத்தல் | 5.40 | 5.40 | — |
| குடி பானங்கள் (போட்டலோ) ... ... | ஒரு போத்தல் | 0.40 | 0.42 | + 5 |
| குடிபானங்கள் (சோடா) .. ... | ,, ,, | 0.20 | 0.22 | + 10 |
| பழச்சாறு (பசோனு) ... ... ... | ,, ,, | 5.00 | 5.60 | + 12 |
| பழச்சாறு (ஆரஞ்சு) ... ... ... | ,, ,, | 5.25 | 6.00 | + 14 |
| ஜலண்ட் பிறைட் புகையிலை ... ... . | ஒரு ருத்தல் | 61,10 | 56.45 | — 8 |
| திறிறேசஸ் சிகாகட்டு ... . ... | ஆயிரம் | 148.85 | 139.55 | — 7 |
| **2. ஆடைவகைகளும் உடைகளும்** | | | | |
| துணி (எல். டி. எம்.) வெள்ளை ... ... | ஒரு யார் | 2.40 | 2.85 | + 19 |
| துணி எல். டி. எம்.) நிறமூட்டப்பட்டது) ... ... | ,, ,, | 2.50 | 3.35 | + 34 |
| பப்ளின் — வெள்ளை ... ... ... | ,, ,, | 2.75 | 3.65 | + 33 |
| வோயில் — வெள்ளை ... ... ... | ,, ,, | 2.25 | 2.90 | + 29 |
| நூல் 30 கொண்டவை ... ... ... | ஒரு ருத்தல் | 5.20 | 7.20 | + 38 |
| சீலை பப்றிக் (அச்சிடப்பட்டவை) 44′ × 45″ ... | ஒரு யார் | 10.50 | 9.33 | — 11 |
| சேலை (சீசில்க்) 44″/45″ ... ... | ,, ,, | 8.80 | 10.46 | + 19 |
| சேட்டுத் துணி (ரெக்ரோன் பருத்தி) 35″/36″ ... | ,, ,, | 15.00 | 15.00 | — |
| சேட்டுத் துணி (சீசில்க் சில்வர்லைன்) 35″/36″ ... | ,, ,, | 12.50 | 11.50 | — 8 |
| உடைக்கான பப்றிக் (நைலோன் சற்றின்) 35″/36″ ... | ,, ,, | 10.25 | 9.00 | — 12 |
| காற்சட்டைத் துணி (சீசில்க்-கபிரான்) 27″/28′ ... | ,, ,, | 18.50 | 22.33 | + 21 |
| **3. மருந்து வகைகளும் குளியலறைத் தயாரிப்புப் பொருட்களும்** | | | | |
| அஸ்பிறின் குளிகைகள் ... ... | 1000 | 6.75 | 6.75 | — |
| சி-பி குளிகைகள் (விட்டமின் சி-பி குளிகைகள்) ... | 1000 | 62.70 | 62.70 | — |
| ரெறுமைசின குளிகைகள் ... ... ... | 100 வில். போத். | 69.50 | 69.50 | — |
| ஒப்றன் (குளிகைகள்) ... ... | 30 ,, ,, | 6.61 | 6.61 | — |
| டியூறேல் .. ... ... ... | 1 போத்தல் | 4.05 | 4.05 | — |
| வாட்டர்பரீஷ் விட்டமின் ரொனிக் ... ... | ஒருபோத்தல் 6அவு. | 3.47 | 3.47 | — |
| பென்சிலின் 'ம்' டியூமெக்ஸ் ... ... | போத்தல் | 64.00 | 64.00 | — |
| சலவைச் சோடா ... ... ... | லோங். தொன் | 1,836.80 | 2,038.40 | + 11 |
| குளோறின் திரவகம் ... ... ... | ,, ,, | 2,531.20 | 2,755.20 | + 9 |
| கல்சியம் குளோறைட் ... ... ... | ,, ,, | 1,232.00 | 1,500.00 | + 22 |
| **4. தளபாடங்களும் வீட்டுத் தளபாடங்களும்** | | | | |
| அலுவலக அலுமாரி (உருக்கு) ... ... | 1 | 495.00 | 575.00 | + 16 |
| கோவை அலுமாரி (உருக்கு) ... ... | 1 | 545.00 | 590.00 | + 8 |
| இரப்பரும் தும்பும் கலந்த மெத்தை (72″/36″ சாதாரணம்) .. ... | 1 | 112.00 | 140.25 | + 25 |
| இரப்பரும் தும்பும் கலந்த மெத்தை (72″/48″ அலங்காரம்) ... .. | 1 | 164.00 | 182.75 | + 11 |
| இரப்பரும் தும்பும் கலந்த மெத்தை (72″/60″ அதிவிசேடம்) ... ... ... | 1 | 236.00 | 289.00 | + 22 |
| மூடப்படாத மெத்தை 2″ ... ... | 1 சதுர அடி | 2.60 | 3.61 | + 39 |

(தொடரும்)

## பொருட்களின் மொத்த விற்பனை விலைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| **5. இரும்பும், மின்சாரப் பொருட்களும்** | | | | |
| வட்ட எம். எஸ். உருக்கு ½'' ... | மெற்றிக் தொன் | 1,930.00 | 2,470.00 | + 28 |
| வட்ட எம். எஸ். கோணங்கள் 1×1×⅛'' ... | ,, | 1,980.00 | 2,535.00 | + 28 |
| கட்டும் கறுப்புக் கம்பி ... | ,, | 2,135.00 | 2,790.00 | + 31 |
| முள்ளுக் கம்பி (5.6 மி. மீ.) .. | 56 இரு. | 57.25 | 80.50 | + 41 |
| மண்வெட்டி (லங்காலோக) (7''x10'') ... | 1 | 12.00 | 17.05 | + 42 |
| கோடரிகள் (லங்காலோக) (5.6 மி. மீ) (நேரான) ... | 1 | 18.00 | 21.69 | + 21 |
| கம்பி ஆணி ... | மெற்றிக் தொன் | 2,135.00 | 2,695.00 | + 26 |
| பி.வி.சி.மின்சாரம் பாயாமல் மூடப்பட்ட கம்பிகள் 1/044 | 100 யார் | 31.58 | 36.60 | + 16 |
| 100 அடி ஒட்டோக் கம்பிகள் 35/012 ... | | 23.59 | 26.85 | + 14 |
| பொதுவான வெளிச்சங் கொடுக்கும் விளக்குகள் (25.வா.) ... | 1 | 2.07 | 2.39 | + 15 |
| சிறப்பான விளக்குகள் (15 வா.) ... | 1 | 2.15 | 2.48 | + 15 |
| பகல் வெளிச்சம் பல்ப்புகள் (60 வா.) ... | 1 | 2.30 | 2.65 | + 15 |
| **6. கைத்தொழில், வர்த்தக, வேளாண்மை இயந்திரங்களும் சாதனங்களும், மோட்டார் வாகனங்களும். டயர்களும், ரியூப்புக்களும்** | | | | |
| லோட்டஸ் ஈருருளி டயர்கள் 28×1½'' ... | 1 | 7.45 | 9.00 | + 21 |
| லோட்டஸ் அதிகவரி டயர்கள் 28×1½'' ... | 1 | 9.25 | 10.75 | + 16 |
| லோட்டஸ் பொருத்தற்ற ரியூப்புக்கள் 26 x 13/8'' ... | 1 | 3.70 | 3.95 | + 7 |
| தையல் இயந்திரங்கள் (266 எச்/55 சிங்கர்) ... | 1 | 668.15 | 808.15 | + 21 |
| தையல் இயந்திரங்கள் (237எம்/டபி. சிங்கர்) ... | 1 | 1,145.40 | 1,285.40 | + 12 |
| சென்றிக் பிஸ்டன் நீர் இறைப்பு ¾'' (75/1) ... | 1 | 970.00 | 1,211.00 | + 25 |
| சென்றிக் கைத்தொழில் நீர் இறைப்பு இயந்திரம் 1¼1'' (140/3) ... | 1 | 1,373.00 | 1,609.00 | + 17 |
| சென்றிக் வேளாண்மை நீர் இறைப்பு இயந்திரம் 2'' (ஈ. கே. ஜே.) ... | 1 | 1,476.00 | 1,706.00 | + 16 |
| மேசை விசிறி ... ... | 1 | 363.00 | 531.75 | + 46 |
| கால் விசிறி 16'' ... .. ... | 1 | 529.00 | 604.00 | + 14 |
| **7. வேளாண்மை மூலப் பொருட்கள்** | ஒரு தொன் | | | |
| காய்கறிக்கான சிறப்பு உரம் (இல.1) ... | ,, | 489.58 | 524.16 | + 7 |
| நெல் கலப்புச் சிறப்பு உரம் ... | ,, | 577.50 | 642.16 | + 11 |
| சாம்பலுப்புக் கலந்த பாசிகை (60%) ... | ,, | 633.33 | 728.33 | + 15 |
| யூறியா ... | ,, | 753.33 | 865.00 | + 15 |
| அமோனியாவின் சல்பேற்று ... | ,, | 543.75 | 572.50 | + 5 |
| சபொஸ் பொரஸ்பேற்று ... | ,, | 413.75 | 420.83 | + 2 |
| அக்ரோ இரசாயணப் பொருட்கள் (டி.டி.ரி. 25% ஈசி) ... | கலன் ஒன்று | 16.92 | 19.35 | + 14 |
| ,, (திரியன்2 ஈ) ... ... | ,, | 108.00 | 108.00 | — |
| இறப்பர் செய்முறை எண்ணெய் (எல்) ... ... | ,, | 10.08 | 17.19 | + 71 |
| | | | 1.14 | + 27 |
| **8. மர கட்டடப் பொருட்கள்** | | | | |
| 'கொறிகேற்றற் சீற்' ... | ஒரு சதுர அடி | 0.90 | 0.77 | + 38 |
| தட்டை சீற் ... | ,, | 0.56 | | |
| சீமேந்து (காங்கேசன் துறை) ... | அந்தர் ஒன்று | 10.50 | 12.00 | + 14 |
| சீமேந்து (ருகுணு) ... | ,, | 12.00 | 13.00 | + 8 |
| சீமேந்து (புத்தளம்) ... | ,, | 11.25 | 12.50 | + 11 |
| | | | 0.83 | + 30 |
| | | | 0.93 | + 39 |
| **9. பல்வகைப் பொருட்கள்** | | | | |
| மின்ஞெளி பற்றறி ... | 1 | 0.64 | | |
| ரூன்சிஸ்ரர் பற்றறி ... | 1 | 0 67 | | |
| றேடியோ பற்றறி ... | 1 | 32.00 | 33.50 | + 5 |
| தன்னியக்க பற்றறி 6 வோ 60 ... ... | 1 | 100 00 | 150.00 | + 50 |
| தன்னியக்க பற்றறி 12 வோ 60 ... ... | 1 | 166.00 | 245.00 | + 48 |
| றீம்களிலான எழுதும் தாள்கள் ... | 500 தாள்கள் | 43.20 | 43.20 | — |
| தட்டச்சுக் காபன் 8''×10'' ... ... ... | 1 பெட்டி | 14.00 | 16.00 | + 14 |
| தரை மினுக்கி ... ... ... | 1 ரு. தகரம் | 4.00 | 5.65 | + 41 |
| மோட்டார் மெழுகு ... ... ... | ½ ரு. தகரம் | 4.75 | 6.80 | + 43 |
| தீக்குச்சிகள் ... ... ... ... | 1 கூட்டு (7200 பெட்டிகள்) | 340.00 | 472.00 | + 39 |

(இ) உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் மொத்த விலைகள் :

மத்திய வங்கியால் 1973இல் நடாத்தப்பட்ட, இலங்கையில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் மொத்த விலைகளின் அசைவு பற்றிய ஆய்விற்குத் தயாரிப்பாளர் காட்டிய ஆதரவு திருப்திகரமாயிருந்தது. இவ்வாய்வில் அடக்கப்பட்ட குறிப்பிட்ட சில விடயங்களின் விலை அசைவுகள் அட்டவணை 11 (ஐ) 3 இல் காட்டப்பட்டுள்ளது. இவ்விலைகள் பங்கீட்டு வர்த்தகத்தின் பல்வேறு இடங்களிலும் மொத்த விநியோகத்தரால் விதிக்கப்பட்ட விலைகளின் இலாப எல்லையை உள்ளடக்கவில்லை. ஆனால் தயாரிப்பாளரால் அல்லது அவர்களின் முகவர்களால் குறிக்கப்பட்ட விலைகளையே குறிக்கும்.

மருந்து, புகையிலை, புடவை தொடர்பான சில விடயங்கள் தவிர்ந்த ஏனைய மொத்த விலைகள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுகின்றன. இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் அதிகரித்த விலையும் மொத்த விற்பனவு வரி அதிகரிப்பும், அதிகரித்த கூலியும், விலை அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும்.

சிகரெற், புகையிலை என்பனவற்றின் மொத்த விலையின் வீழ்ச்சிக்குப் புகையிலையின் மீதான தீர்வை வரிக் குறைப்புக் காரணமாயுள்ளது. மேலும், மொத்த விற்பனவு வரிக் குறைப்பின் விளைவாலும், 1973இல் செயற்கைப்புடவைகளில் விதிக்கப்பட்ட விலைக்கட்டுப்பாட்டினாலும் சில மொத்த விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டது. பெருந்தேவையிலுள்ள பல்வகை மருந்துகளின் மொத்த விலைகள் அவ்வாண்டு முழுவதும் நிலையாக இருப்பதற்கு விலைக்கட்டுப்பாடுகள் பெரிதும் உதவின.

2. கூலிகள் :

அரசாங்கத் துறையிலுள்ள தொழில் நுட்ப ஊழியர்கள், எழுதுவினைஞர்கள், சிற்றூழியர்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள், இவர்களுக்கான மத்திய வங்கியின் கூலிவீதக் குறிகாட்டிகள், அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய ஆகக் குறைந்த சம்பளங்கள், கூலிகள், படிகள் ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு, ஆண்டு உயர்ச்சிக் கொடுப்பனவுகள் இக்கணிப்பில் உள்ளடக்கப்படவில்லை. தனியார் துறையிலுள்ள கூலி நிர்ணய சபையினால் உள்ளடக்கப்பட்ட விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றில் பணியாற்றும் வேலையாட்களின் கூலிவீதக் குறிகாட்டிகள், தொழிற் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்றன. இக்குறிகாட்டிகள் கூலிநிர்ணயச்சபையினால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கூலியையும், 1967, திசெம்பரிலிருந்து 'நாணய மதிப்பிறக்கப் படிகளையும் உள்ளடக்கி' விளங்குகின்றன.

குறிப்பிடப்பட்ட குறிகாட்டிகள் உண்மையான உழைப்புக்களை உள்ளடக்க வில்லை என்பது கவனிக்கத்தக்கது. ஏனெனில், மேலதிக வேலைநேரச் சம்பளத் தினையும் தனியார் துறையினரைப் பொறுத்தவரை ஊக்கப்பாட்டுக் கொடுப் பனவு அல்லது மிகையூதியம் போன்ற சிறப்புக் கொடுப்பனவுகளையும் இவை உள்ளடக்கவில்லை. உண்மைக் கூலிவீதக் குறிகாட்டிகள் கூலிவீதக் குறிகாட்டி களை, வாழ்க்கைச் செலவுக்குறிகாட்டிகளால் (கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டி) சுருக்குவதன் மூலமே மத்திய வங்கியாற் கணிக்கப்படுகின்றது.

1972இனதும் 1973இனதும் அரசாங்க ஊழியர்களினது ஆண்டு, காலாண்டுக் கூலிவீதக் குறிகாட்டிகளையும், உண்மைக்கூலி வீதக் குறிகாட்டி களையும் அட்டவணை 11 (ஐ) 4 தருகிறது.

அட்டவணை II (ஐ) 4

அரசாங்க ஊழியர்களின் கூலிவீதக் குறிகாட்டி எண்கள் 1952=100

| | தொழில்நுட்ப எழுதுவினைஞர் தர ஊழியர்கள் | | சிற்றூழியர்கள் | | மத்திய அரசாங்க ஊழியர்கள் (அ) | | அரசாங்கப் பள்ளிக் கூட ஆசிரியர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கூலி வீதக்குறி காட்டிகள் | உண்மைத் கூலிவீதக் குறிகாட்டி கள் | கூலி வீதக் குறி காட்டிகள் | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி கள் | கூலி வீதக் குறி காட்டிகள் | உண்மைக் கூலிவீதக் குறி காட்டி கள் | கூலி வீதக் குறி காட்டிகள் | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி கள் |
| 1972 சராசரி ... | **157.4** | **104.4** | **183.4** | **121.6** | **171.7** | **113.8** | **141.2** | **93.6** |
| 1ஆம் கால் ... | 157.2 | 106.2 | 182.9 | 123.5 | 171.3 | 115.7 | 141.1 | 95.3 |
| 2ஆல் கால் | 157.2 | 104.6 | 182.9 | 121.7 | 171.3 | 114.0 | 141.1 | 93.9 |
| 3ஆம் கால் ... | 157.2 | 103.3 | 152.9 | 120.2 | 171.3 | 112.6 | 141.1 | 92.7 |
| 4ஆம் கால் ... | 158.2 | 103.4 | 182.2 | 121.0 | 173.0 | 113.1 | 141.5 | 93.5 |
| 1973 சராசரி ... | **163.0** | **98.6** | **194.2** | **117.5** | **180.1** | **108.8** | **144.3** | **87.3** |
| 1ஆம் கால் ... | 160.2 | 101.6 | 189.9 | 120.4 | 176.5 | 111.9 | 142.4 | 90.3 |
| 2ஆம் கால் ... | 160.2 | 99.3 | 189.9 | 117.7 | 176.5 | 108.7 | 142.4 | 88.3 |
| 3ஆம் கால் .. | 160.2 | 95.5 | 189.9 | 113.2 | 176.5 | 105.2 | 142.4 | 84.9 |
| 4ஆம் கால் ... | 171.3 | 98.0 | 207.2 | 118.6 | 190.9 | 109.3 | 149.8 | 85.7 |
| 1973 இலிருந்து 1972 இல் சதவீத மாற்றம் | + 3.6 | — 5.6 | + 5.9 | — 3.4 | + 4.9 | — 4.4 | + 2.2 | — 6.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) எழுதுவினைஞர்கள், தொழில்நுட்ப ஊழியர்கள், சிற்றூழியர்களுக்கான குறிகாட்டி.

குறிப்பு: குறிகாட்டிகளாவன 1959 செத்தெம்பர் 30 இல் வேலைக்கமர்த்தப்பட்டோரின் அடிப்படையில் ஒரு நிலையான மதிப்பீட்டிற் கணிக்கப்படுகின்றன. குறிகாட்டிகளைக் கணக்கிடுவதில் பயன்படும் கூலிவீதங்கள், ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட தரங்களுக்குரிய தொடக்கச் சம்பளம், கூலிகள் படிகள் ஆகியவற்றினைக் கொண்டுள்ளன.

1973இல் எல்லா அரசாங்க் துறை ஊழியர்களின் வருடார்ந்த சராசரிக்கூலி வீதக்குறிகாட்டி 1972ன் குறிகாட்டியின் சராசரியிலும் பார்க்கக்கூடிய அதிகரிப்பைக் கொண்டுள்ளது. தொழில் நுட்ப ஊழியர்கள் எழுதுவினைஞர்கள், சிற்றூழியர்கள், ஆசிரியர்களுக்கான கூலிவீதக் குறிகாட்டிகள் முறையே 3.6, 5.9, 2.2 சதவீதங்களால் அதிகரித்தன.

ஏறத்தாழ மூன்றுண்டுகளின் பின் அரசாங்க ஊழியர்களின் கூலிவீதங்களில், 1972, திசெம்பரில் ஒரு அதிகரிப்பு ஏற்பட்டது. வரவு செலவுத் திட்ட எடுத்துரைப்புகளுக்கிணங்க ரூ. 250 க்குக் குறைவாக மாதச்சம்பளம் பெறும் ஊழியர்களுக்கான சிறப்புப்படிக் கொடுப்பனவு காரணமாக இவ்வதிகரிப்பு ஏற்பட்டது. மறுபடியும், 1973இன் இறுதிப்பாகத்தில் 1972 ஒற்றேபர் 1ஆம் திகதியிலிருந்து வழங்கப்பட்ட ஒரு ''விசேட படியினல்'' அரசாங்க ஊழியரின் கூலிவீதக் குறிகாட்டியில் ஒரு அதிகரிப்பு ஏற்பட்டது. ரூ. 400க்குக் குறைவாக ஊதியம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தில் 10 சதவீதமான ரூ. 20க்கு மேற்படாத தொகை சிறப்புப்படியாக வழங்கப்பட்டது.

1973இல் அரசாங்க ஊழியர்களின் உண்மைக்கூலிகள் வீழ்ச்சியடைந்தன. அரசாங்க ஊழியர்கள், சிற்றூழியர்கள், அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களின் குறிகாட்டிகள் முறையே 5.6, 3.4, 6.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளன.

கீழ்க்காணும் அட்டவணை, 1972இலும் 1973இலும் தனியார் துறையில் சில குறிக்கப்பட்ட கூலி நிர்ணய சபைகளினுல் உள்ளடக்கப்பட்ட வேலையாட்களின் ஆண்டு, காலாண்டுக்கான ஆகக்குறைந்த கூலி வீதத்தினைத் தருகிறது.

தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் 1973இன் காலாண்டின் ஆண்டுச் சராசரிக் கூலிவீதக் குறிகாட்டிகள் சென்றுண்டிலும் பார்க்கக் கூடியதாக இருந்தன. வேளாண்மையிலுள்ள வேலையாட்களின் குறிகாட்டி 13.2 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்ய கைத்தொழில், வர்த்தகங்களின் வேலையாட்களின் குறிகாட்டி 10.1 சதவீதத்தால் உயர்ந்தது.

கூலி நிர்ணய சபையின் கீழ் வேலைசெய்யும் வேலையாட்களுக்கு விலை அதிகரிப்புகளை ஓரளவு ஈடு செய்யும் முறையில் வழங்கப்பட்ட அதிகரித்த கூலி வீதங்களும் ரூ. 400இற்குக் குறைவாகச் சம்பளம் பெறும் எல்லாத்தனியார் துறை ஊழியர்களுக்கும் சம்பளத்தில் 10 சதவீதமான 20 ரூபா உச்சவரம்புக் குட்பட்ட கொடுப்பனவைச் செய்தமையும் இக்குறிகாட்டிகளின் அதிகரிப்புக் குக் காரணமாகும்.

1973இல் விவசாய, கைத்தொழில் வர்த்தக, கூலி நிர்ணய சபைத் தொழில்களின் உண்மைக்கூலி வீத ஆண்டுச் சராசரிக் குறிகாட்டி முறையே 3.2 சதவீதமாயும் 0.3 சதவீதமாயும் 2.0 சதவீதமாயும் உயர்ந்தது. மறுபுறத்தில் அவ்வாண்டில் அரசாங்க ஊழியர்களின் உண்மைக் கூலிகள் வீழ்ச்சியடைந்தன.

## அட்டவணை II (ஐ) 5

### கூலிநிருணய சபைக்குட்பட்ட தொழில்களிலுள்ள ஊழியர்களின் குறைந்த மட்டக் கூலிவீதக் குறிகாட்டி எண்கள் (1952=100)

| | விவசாயத் தொழிலாளர்கள் (அ) | | கைத்தொழில் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் (ஆ) | | கூலிநிருணய சபைக்குட்பட்ட தொழிலாளர்கள் (இ) | |
|---|---|---|---|---|---|---|
| | மிகக் குறைந்த கூலிவீதக் குறிகாட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி | மிகக் குறைந்த கூலிவீதக் குறிகாட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி | மிகக் குறைந்த கூலிவீதக் குறிகாட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி |
| 1972 சராசரி | 148.5 | 98.3 | 181.4 | 120.3 | 156.9 | 100.7 |
| 1 ஆம் காற்பகுதி | 145.6 | 97.3 | 180.5 | 121.9 | 149.2 | 100.8 |
| 2 ஆம் காற்பகுதி | 146.3 | 97.6 | 181.1 | 120.5 | 149.8 | 99.7 |
| 3 ஆம் கரபகு | 148.5 | 100.3 | 181.9 | 119.5 | 152.0 | 99.9 |
| 4 ஆம் காற்பகு | 153.6 | 98.4 | 182.5 | 119.3 | 156.5 | 102.3 |
| 1973 சராசரி | 168.1 | 101.5 | 199.7 | 120.7 | 169.9 | 102.7 |
| 1 ஆம் காற்பகுதி | 158.8 | 100.7 | 191.7 | 121.5 | 162.1 | 102.8 |
| 2 ஆம் காற்பகுதி | 160.4 | 99.4 | 194.0 | 120.2 | 163.9 | 101.5 |
| 3 ஆம் காற்பகுதி | 165.7 | 98.7 | 196.0 | 116.8 | 168.6 | 100.5 |
| 4 ஆம் காற்பகுதி | 187.4 | 107.3 | 217.4 | 124.4 | 184.6 | 105.7 |
| சதவீத மாற்றம் – 1972இல் இருந்து 1973 இற்கு | + 13.2 | + 3.2 | + 10.1 | + 0.3 | + 8.3 | + 2.0 |

மூலம்: தொழிற்றிணைக்களமும, இலங்கை மத்திய வங்கியும்.

அ. தேயிலை வளர்ப்பும் அதன் தயாரிப்பும், றப்பர் வளர்ப்பும் அதன் தயாரிப்பும், தெங்கு வளர்ப்பும் ஆகிய துறைகளை மட்டும் உள்ளடக்கும்.

ஆ. தெங்குப் பொருட்கள் உற்பத்தி, பொறியியல், அச்சடித்தல்,தீப்பெட்டி உற்பத்தி,வாகனப் போக்குவரத்து, கப்பற்றுறைமுகம், துறைமுகப் போக்குவரவு, தேயிலை ஏற்றுமதி, றப்பர் ஏற்றுமதி, திரைப்படம், கட்டடத் தொழில என்னும் துறைகளை மட்டும் உள்ளடக்கும்.

இ. வேளாண்மை, கைத்தொழில் வர்த்தகம் ஆகிய துறைகளிலுள்ள தொழிலாளர்களின் இணைந்த குறிகாட்டிகள்.

1. இச்சட்டத்தின் கீழ், 1967 திசெம்பர் பெறுமதியில் நிலையாக்கப்பட்டபடி ஊழியர்களுக்கு நாணய மதிப்பிறக்கப்படியும் வாழ்க்கைச் செலவுப்படி அல்லது சிறப்புப் படியும் வழங்கப்படுகிறது. இச்சட்டத்தின்படி, வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியின் அடிப்படையில் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி அல்லது சிறப்புப்படி இச்சட்டத்தின் கீழே வழங்கப்படும் மொத்தப் படிகளை விட அதிகரிக்குமாயின் இவ்வதிகரிப்புக்கு உரித்துடையவர்களாவர்.

இந்தவர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளரின் ஆகக்குறைந்த கூலிகள் இவ்வாண்டின் அதிகரிப்புடன் ஒன்று சேர்க்கப்பட்டன. அவையாவன:

(அ) தெங்கு உற்பத்தித்தொழிலுக்கு 1973 சனவரி 1இலிருந்து நாளொன்றுக்கு 1.75 கொண்ட அதிகரிப்பு.

(ஆ) கட்டடத்தொழிலுக்கு 1973 மார்ச்சு 1ஆந் திகதியிலிருந்து நாளொன்றுக்கு ரூ. 1.50 கொண்ட அதிகரிப்பு.

(இ) ஐஸ், குளிர்பான தயாரிப்புத் தொழிலுக்கு 1973 நவம்பர் 1ஆம் திகதியிலிருந்து கிட்டத்தட்ட ரூ. 2.00 கொண்ட அதிகரிப்பு.

நூற்றுக்குக் குறையாத வேலையாட்களை அமர்த்தியுள்ள புடவை தயாரிப்பாளர்கள் பயிற்சி பெறாத ஒவ்வொரு வேலையாளுக்கும் அவர் மாதத்தில் குறைந்தளவு 25 நாட்கள் வேலைசெய்திருப்பாராயின் ஆகக்குறைந்தளவு மாதக் கூலியாக ரூ. 180ஐ அளிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இது 1.12.1973இலிருந்து நடைமுறைக்கு வந்தது.

1973 யூன் மாதத்தில் மர,தச்சுத் தொழிலில் ஈடுபட்ட வேலையாட்களுக்காக ஓர் சம்பள நிர்ணயசபை அமைக்கப்பட்டு, சம்பள நிர்ணய சபைகளில் மொத்த எண்ணிக்கை 33ஆக விளங்கியது.